**அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி**

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மறுதரமதிப்பீட்டிலும் “ஏ” தகுதி பெற்றது)

நாள் : 07-04-2017



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் துறை முன்னாள் மாணவர் முனைவர். ஆர். சுவாமிநாதன் அவர்கள் நிதி உதவியுடன் ரூபாய் 7.5 இலட்சம் செலவில் அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் கல்லூரி நுழைவுவாயிலில் கட்டப்பட்டுள்ள ஆர்ச்சின் திறப்புவிழா 06-04-2017 அன்று நடைபெற்றது.



அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. சொ. சுப்பையா அவர்கள் தலைமையில், அழகப்பா கல்வியியல் கல்லூரி முன்னாள் மாணவரும், கல்வியியல் துறையின் முன்னாள் பேராசிரியருமான முனைவர் எஸ். மோகன் மற்றும் கல்வியியல் துறையின் முன்னாள் மாணவர் முனைவர் ஆர். சுவாமிநாதன் ஆகியோரால் ஆர்ச் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், பல்கலைக்கழக பதிவாளர் (பொ.) முனைவர் வி. பாலச்சந்திரன், பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் இரெ. தண்டபாணி, முன்னாள் தனி அலுவலர் முனைவர் ஏ. இராமகிருஷ்ணன் மற்றும் கல்வியியல் துறை மற்றும் கல்வியியல் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பேரா. வி. பாலச்சந்திரன்
பதிவாளர் (பொ.)